பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

30 09 2025 TUESDAY 6.30 PM

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சரக்கு மற்றும் சேவை வரி குறைக்கப்பட்ட பின்பும் சில பொருட்களுக்கான விலைகள் குறைக்கப்படாதது ஏன் என்று மின்னணு வர்த்தக நிறுவனங்களை மத்திய அரசு வினவியுள்ளது.

- கரும்பு விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வுகாண இந்திய வேளாண் ஆராய்ச்சிக்குழுமம் சிறப்புக்குழுவை அமைக்க உள்ளதாக மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

- கரூரில் த வெ க கூட்டம் நடத்துவதற்கு மிக குறுகலான இடம் அளிக்கப்பட்டதாக தேசிய ஜனநாயக கூடட்ணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆய்வுக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் திருமதி ஹேமமாலினி தெரிவித்துள்ளார்.

- கரூர் கூட்டத்திற்கு முழுமையான காவல்துறை பாதுகாப்பு அளிக்கப்பட்டதாக தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது.

- ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூன்றாவது கட்டப்பணிக்கான அரசாணையை மாநில அரசு வெளியிட்டுள்ளது.

---- இனி விரிவான செய்திகள் ----

<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி குறைக்கப்பட்ட பின்பும் சில பொருட்களுக்கான விலைகள் குறைக்கப்படாதது ஏன் என்று மின்னணு வர்த்தக நிறுவனங்களை மத்திய அரசு வினவியுள்ளது.

இம்மாதம் 22-ஆம் தேதிமுதல், சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டு ஐந்தடுக்கு கட்டமைப்பு, இரண்டடுக்கு கட்டமைப்பாக குறைக்கப்பட்டுள்ளதை மத்திய அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

வரிச்சுமையை குறைத்து அதன் பலனாக நுகர்வோருக்கு குறைந்த விலையில், பொருட்கள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், கொண்டுவரப்பட்ட மத்திய அரசின் நடவடிக்கைக்கு இந்த நிறுவனங்கள் ஒத்துழைப்பு அளிக்காமல் விலையை மட்டும் உயர்த்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய மத்திய நுகர்வோர் விவகாரங்கள்துறை செயலர் திருமதி நிதிகரே, GST வரி குறைப்பின் பயன்கள் நுகர்வோருக்கு கிடைக்கவில்லை என மூவாயிரத்திற்கும் மேற்பட்ட புகார்கள் தமது துறைக்கு வந்திருப்பதாக தெரிவித்தார்.

இதுபோன்று வரும் புகார்கள் உடனடியாக மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்கத்தீர்வை வாரியத்திற்கு அனுப்பப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பண்டிகை காலத்தில் நுகர்வோருக்கு குறைக்கப்பட்ட விலையில் பொருட்கள் கிடைப்பதற்கான நடவடிக்கையை மின்னணு வர்த்தக நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் திருமதி நிதிகரே வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

நாட்டில் கரும்பு விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களை களைய இந்திய வேளாண் ஆராய்ச்சிக்குழுமம் சிறப்புக்குழுவை அமைக்க உள்ளதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிலையான கரும்பு பொருளாதார ஆலோசனைக் கூட்டத்தில் காணொலி காட்சி மூலம் உரையாற்றிய அவர், இந்தக்குழு விவசாயிகள், விஞ்ஞானிகள் உள்ளிட்டோருடன் கலந்து ஆலோசித்த பின் கரும்பு கொள்கையை வடிவமைக்கும் என்று கூறினார்.

கரும்பு விவசாயிகள் பயன்பெறுவதற்காகவே இந்தக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

விவசாயிகள், வேளாண் விஞ்ஞானிகள், வேளாண்சார் தொழில்துறையினர் ஆகிய அனைத்துத்தரப்பினரிடமும் ஆலோசனை நடத்தப்பட்டு கரும்புக்கான கொள்கை வகுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

வேளாண் ஆராய்ச்சிப்பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று தெரிவித்த அவர், விவசாயிகள் தாங்கள் அன்றாடம் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு அனுபவ ரீதியான தீர்வுகளை பெறுவதற்கும் உதவி செய்யப்படும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<<>>>>>

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூன்றாவது கட்டப்பணிகளை 8 ஆயிரத்து 428 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்வதற்கான அரசாணையை மாநில அரசு இன்று வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக, இன்று வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், ஓசூர், தருமபுரி. கிருஷ்ணகிரி ஆகிய பகுதிகளில் உள்ள 6 ஆயிரத்து 802 குடியிருப்புகளில் வாழும் சுமார் 39 லட்சம் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

ஊரகப்பகுதிகளுக்கு மத்திய அரசின் 2 ஆயிரத்து 283 கோடி ரூபாய் பங்களிப்புடன் மாநில அரசு மற்றும் தொழில்துறையின் பங்களிப்பாக ஆயிரத்து 761 கோடி ரூபாய் செலவிடப்பட உள்ளது.

ஊரக நகர்ப்புற பகுதிகளுக்கான திட்டப்பணிகளுக்கு 4 ஆயிரத்து 384 கோடி ரூபாய், ஜப்பான் பன்னாட்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும், இதற்கான அனுமதி மத்திய அரசிடம் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின்மூலம், ஓசூர் மாநகராட்சி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் வசிக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் வேலைவாய்ப்பு பெறுவார்கள் என்றும், தொழில் நிறுவனங்கள் வளர்ச்சியடையும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

ஆயுதபூஜை மற்றும் விஜயதசமி பண்டிகையையொட்டி, தமிழக அரசு போக்குவரத்துக்கழகம் சார்பில் கூடுதலாக ஆயிரத்து 300 பேருந்துகள் இயக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஏற்கனவே 2 ஆயிரத்து தொள்ளாயிரம் பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே, மாநில போக்குவரத்துத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த பண்டிகை காலத்தின்போது சொந்த ஊர்களுக்கு செல்லும் பயணிகளிடமிருந்து ஆம்னி பேருந்துகள் கூடுதல் கட்டணம் வசூலிக்கக்கூடாது என்று எச்சரித்துள்ளது.

கூடுதல் கட்டணம் வசூலித்தாலோ, விதிமுறைகளை மீறினாலோ அந்த ஆம்னி பேருந்துகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

கரூர் கூட்டநெரிசல் சம்பவம் போன்று எதிர்காலத்தில் நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தேசிய ஜனநாயக கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆய்வுக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் திருமதி ஹேமமாலினி தெரிவித்துள்ளார்.

கரூரில் கூட்டநெரிசல் துயர சம்பவம் நிகழ்ந்த இடத்தை தமது குழுவினருடன் பார்வையிட்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், த வெ க கூட்டம் நடத்துவதற்கு மிக குறுகலான இடம் அளிக்கப்பட்டதாக குற்றம் சாட்டினார்.

தாங்கள் ஆய்வு செய்த விவரங்களை பிஜேபித் தலைவர் திரு நட்டாவிடம் அளிக்க இருப்பதாகவும், திருமதி ஹேமமாலினி தெரிவித்தார்.

(voice Byte – ஹேமமாலினி – 49 Sec. )

இக்குழுவில் திரு அனுராக் தாக்கூர், திரு தேஜஸ்வி சூரியா உள்ளிட்ட எட்டு பேர் இடம்பெற்றுள்ளனர்.

<<<<<>>>>>

கரூரில் த வெ க தலைவர் திரு விஜய் பங்கேற்ற பொதுக்கூட்டத்தில் விதிமுறைகள் மீறப்பட்டதாக மாநில வருவாய்த்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி அமுதா தெரிவித்துள்ளார்.

சென்னையில், அன்றைய தினம் நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பான காணொலி பதிவை மாநில உள்துறை செயலர் திரு தீரஜ்குமார் முன்னிலையில் இன்று வெளியிட்டு விளக்கம் அளித்த அவர், முதலில் ஏழு இடங்களில் தங்களது பொதுக்கூட்டத்தை நடத்துவதற்கு த வெ க சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டதாக தெரிவித்தார்.

தங்களது கூட்டத்திற்கு பத்தாயிரம் பேர் வருவார்கள் என அவர்கள் காவல்துறையிடம் அளித்த கோரிக்கை மனுவில் குறிப்பிட்டிருந்ததாகவும், ஆனால், 20 ஆயிரம் பேர் வரக்கூடும்

என்று காவல்துறை சார்பில் கணிக்கப்பட்டு, வேலுச்சாமிபுரத்தில் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இந்த கூட்டத்திற்கு தேவையான அளவில் பாதுகாப்பு அளிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்த பிரச்சாரக் கூட்டத்தின்போது மின் விநியோகம் நிறுத்தப்படவில்லை என்றும், திருமதி அமுதா தெரிவித்தார்.

<<<<<>>>>>

கரூர் கூட்ட நெரிசல் துயர சம்பவம் குறித்து தாம் மிகவும் மனவேதனை அடைந்திருப்பதாகவும், இச்சம்பவத்தின் பின்னணியில் உள்ள உண்மை நிலை விரைவில் தெரியவரும் என்றும் த வெ க தலைவர் திரு விஜய் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள காணொலி பதிவில், தமது தொண்டர்களுக்கு யாரும் இடையூறு செய்ய வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

எந்தவொரு நடவடிக்கையையும் எதிர்கொள்ள தாம் தயாராக இருப்பதாகவும் அவர் அந்த காணொலி பதிவில் தெரிவித்துள்ளார்.

நிலைமை சீரானதும் கரூர் மக்களை தாம் சந்திக்க இருப்பதாகவும் திரு விஜய் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

## மாவட்டச் செய்திகள்

காஞ்சிபுரத்தில் கோ ஆப் டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி சிறப்பு விற்பனையை மாநில கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு காந்தி தொடங்கிவைத்தார்.

------------

விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டி ஒன்றியத்தில் பல்வேறு அரசு திட்டங்களை தொடங்கிவைத்து முஷ்டகுறிச்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாநில அமைச்சர் திரு தங்கம் தென்னரசு இன்று ஆய்வு செய்தார்.

----------------

திருப்பத்தூரில் மத்திய அரசின் நலத்திட்டங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது.

--------------

சென்னை புறநகர் ரயில்கள் அக்டோபர் இரண்டாம் தேதியன்று ஞாயிற்றுக்கிழமை கால அட்டவணைப்படி இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

*உலகக்கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இலங்கைக்கு எதிராக முதலில் பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை 29 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 136 ரன் எடுத்துள்ளது.*

*குவஹாத்தியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், டாஸ் வென்ற இலங்கை முதலில் பந்துவீச தீர்மானித்தது.*

---------------

*போர்ச்சுக்கல் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*<<<<<END>>>>>*